மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
Mount Druitt Tamil Study Centre

Mobile: 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au




## ஆண்டு 2

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அனைவருக்கும் அன்பான வணக்கம் .......

# தமிழ்ப் புத்தாண்டு

சித்திரைத் திங்கள் முதல் நாளாம்
தமிழர் புத்தாண்டுப் பண்டிகையாம்!
அதிகாலையில் எழுந்திடுவோம்.
மருத்துநீர் வைத்து நீராடிடுவோம்.
புத்தாடை அணிந்திடுவோம்.
பெற்றோர் ஆசி பெற்றிடுவோம்.
வாசலில் கோலம் போட்டிடுவோம்.
மாவிலை தோரணம் கட்டிடுவோம்.

கோயில் சென்று வணங்கிடுவோம்.
புத்தாண்டு வாழ்த்துகள் சொல்லிடுவோம்.
பொங்கல் பொங்கி மகிழ்ந்திடுவோம்.
பலகாரங்கள் செய்திடுவோம்.
உறவினருடன் பகிர்ந்து உண்டிடுவோம்.
கைவிசேடமும் பெற்றிடுவோம்.
பட்டாசுகள் கொளுத்திடுவோம்
சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடிடுவோம் .

நன்றி.
வணக்கம்.




**ஆக்கம்:**
திருமதி. பாமரதி மகேஸ்வரமூர்த்தி
திருமதி. நிசாந்தினி முரளிதரன்